<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>
**<u>MCOP No.188/2025</u>**

ம.சா. 1 தேதி.13.08.2026

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயகிருஷ்ணன் | த/பெ, | வசந்தராஜ் |
| வயது | 56 | தொழில் | இளநிலை உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், சீர்காழி. |
| கிராமம் | சீர்காழி | தாலுக்கா | சீர்காழி |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் சீர்காழி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மேற்படி வழக்கில் நான் சாட்சியம் அளிக்க மோட்டார் வாகன ஆய்வாளர் எனக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளார். மேற்படி அங்கீகாரத்தினை நகல் **எ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த விபத்தில் சம்பந்தப்பட்ட TN 10 R 3399 என்ற நான்கு சக்கர வாகனத்தை மதியழகன் மகன் அருண்குமார் என்பவர் 10.08.2021 அன்று கற்கோவில்சத்திரம்குளம் அருகில் ஓட்டிச்சென்றுள்ளார். மேற்படி அருண்குமார் என்பவருக்கு இரண்டு சக்கர வாகனம் ஓட்டுவதற்கு மட்டுமே ஓட்டுனர் உரிமம் உள்ளது. நான்கு சக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுனர் உரிமம் கிடையாது. மேற்படி விபரம் Parivahan என்ற இணையதளம் முகவரி மூலம் ஊர்ஜிதம் செய்யப்பட்டது. மேற்படி TN 10 R 3399 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் **எ.ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –**

விபத்துக்குள்ளான வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளரிடம் உட்படுத்தும்போது எந்தெந்த ஆவணங்களை தாக்கல் செய்யப்படுகிறதோ அதன் அடிப்படையில் தான் ஆய்வு செய்யப்படும் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் விபத்துக்குள்ளான வாகனத்தை யார் ஆஜர் படுத்தினார் என்ற விபரம் எனக்கு தெரியாது.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.